**MCOP.No.199/2022 P.W.1-தவசெல்வி 24.09.2025**

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எனது முதல் விசாரணை சாட்சியத்தில் உள்ள விவரங்கள் குறித்து எனக்கு நன்றாக தெரியும், அதில் நான் தான் கையொப்பம் இட்டேன். இந்த விபத்து 10.02.2019 அன்று மாலை 3.30 மணிக்கு நடந்தது. இந்த விபத்தில் எனக்கும், என் மகள் தமிழரசிக்கும் அடிப்பட்டது. தர்மாபுரத்திலிருந்து நெம்மேலி நோக்கி சாலை ஓரம் நடந்து வந்துக் கொண்டிருந்தபோது TN-19-K-3875 என்ற மாருதி கார் பின்னால் வந்து மோதி விபத்து ஏற்பட்டது. இந்த விபத்து நடந்த சமயத்தில் என் கணவர் சற்று தள்ளி நின்றிருந்தார். விபத்தின் போது காரானது அருகிலிருந்த டிபன் கடையில் சென்று இடித்து நின்றது. எனது காலிலும், நெற்றியிலும் அடிப்பட்டது. எனது மகள் விபத்தில் தூக்கி எறியப்பட்டு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. விபத்து நடந்தவுடன் அடிப்பட்ட என்னையும், என் மகளையும் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். நான் செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டேன். என் மகளை செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் இருந்து மேல்சிகிச்சைக்காக சென்னை SRM மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். SRM மருத்துவமனையில் 2 மாதங்கள் என் மகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு அதன் பின்னர் சென்னை அரசு மருத்துவமனைக்கு அனுப்பினார்கள். சென்னை அரசு மருத்துவமனையில் இரண்டு வாரங்கள் சிகிச்சை பெற்று அதன் பின்னர் இறந்துவிட்டார். அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 10.02.2019 அன்று விபத்து நடந்து 2 மாதங்கள் கழித்து பிரேத பரிசோதனை செய்யப்பட்டது அது வரை என் மகள் மருத்துவமனையில் தான் இருந்தார். விபத்தானது எனது மற்றும் என் மகளின் அஜாக்கிரதையால் தான் நடந்தது என்று சொன்னால் சரியல்ல. விபத்து நடந்த சமயத்தில் என் மகள் 2ம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தாள். அவர் பரதநாட்டியம் கற்றுக்கொண்டிருந்தார். எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் விபத்து நடக்கவில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் சம்பவ காலத்தில் காலாவதியாகிவிட்டது என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநர் செல்லத்தக்க ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனத்தை ஓட்டியதால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில்

கோரியுள்ள இழப்பீடுகளுக்கு உரிய ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை என்றும், எனவே இந்த மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. விபத்து குறித்து காவல் நிலையத்தில் நான் தகவல் சொல்லவில்லை. என்னை மருத்துவமனையில் வைத்து விசாரித்து புகார் பதிவு செய்தார்கள்.

**மறு விசாரணை**

இல்லை